9th August 1966]

எல்லாம் கிண்டியிலும் சரி, போரென்ஸிக் லபோராடரியிலும் சரி அனலிஸிஸ் பண்ணி வந்திருக்கிறது. இதுவரையில் பாய்ஸனிங் ஒன்றுமில்லை என்று ரிபோர்ட்டு வந்திருக்கிறது. நானும் மறுநாள் போய் பார்த்தேன். பையன்கள் நல்ல ஹெல்தியாகத் தான் இருந்தார்கள்.

* 277 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to undertake a study of infections of Selmonella (food poisoning group organisms) in the State; and

(*b*) if so, the details thereof and the nature of work to be carried on thereat?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன் : ஃபுட் பாய்ஸனிங் என்பது குறிப்பாக மாணவர்களுடைய விடுதிகளில் ஏற்படுவதன் காரணமாக இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து ஆராய்ச்சி செய்வதற்கு அரசாங்கம் ஒரு ஏற்பாடு செய்யுமா ?

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அவர்கள் முன்பு கேட்ட மூலக் கேள்வியையே திருப்பிச் சொல்லுகிறார்கள். முன்பு ஆங்கிலத்தில் போட்ட கேள்வியைத் தமிழில் கேட்கிறார்கள்.

Paucity of X-ray Films

* 278 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the delay and the consequent suffering and hardship caused to patients in need of neuro-surgical and thoracic-surgical treatment due to paucity of X-Ray Films in Hospitals in the State; and

(*b*) if so, the measures the Government have proposed to take for assuring adequate supply of the same?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இம் மாநிலத்தில் உள்ள அரசாங்க மருத்துவ மனைகளில், 1965 நவம்பர் முதல் 1966 ஜனவரி வரை X-கதிர் பிலிம்களுக்குத் தட்டுப்பாடு இருந்த போதிலும், மூளை அறுவைச் சிகிச்சை, அல்லது மார்புப் பகுதி அறுவைச் சிகிச்சை தேவைப்பட்ட நோயாளிகளுக்கு அதனால் இடர்ப்பாடு ஏற்பட்டதாக அரசாங்கத்தின் கவனத்திற்குத் தகவல் எதுவும் கொண்டுவரப்படவில்லை.

(இ) X-கதிர் பிலிம்களுக்குள்ள தட்டுப்பாட்டினைப் போக்குவதற்காக, இந்திய அரசைச் சேர்ந்த சுகாதார அமைச்சகத்திற்கும், இந்திய மருந்துப் பொருள்கள் கட்டுப்பாடு அதிகாரிக்கும் எழுதப்பட்டுள்ளது. பிலிம்கள் வழங்கும் நிறுவனங்களின் பிரதி